பத்திரிக்கைச் செய்தி

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நடவடிக்கை எடுக்க ரூ.1,500/- லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை மற்றும் ரூ.20,000/- அபராதம் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.மணிமாறன், சிங்கார தோப்பு, திருச்சியில் தையலககடை நடத்தி வந்துள்ளார். புகார்தாரின் கடையை உடைத்து கடையில் உள்ள பொருட்களை திருடப்பட்டது தொடர்பாக புகார்தாரர் கோட்டை குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் புகாரை விசாரித்து புகார் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய திரு.முத்துகுமார், சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்கள் தனக்கு ரூ.1,500/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருச்சி பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 01.08.2009 அன்று மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாராரிடமிருந்து திரு.முத்துகுமார், முன்னாள் சிறப்பு சார்பு ஆய்வாளர் லஞ்சபணம் ரூ.1,500/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது சிறப்பு நீதிமன்றம், திருச்சி மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 29.04.2026ந் தேதி திரு.முத்துகுமார், முன்னாள் சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும் மற்றும் ரூ.20,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.